பக்கங்கள் 25

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | வைகாசி 16 வெள்ளிக்கிழமை 30.05.2025 | அதிர்வு 299

## ஆட்சியாளர்கள் உறங்கினால் புலிகள் மீள் எழுச்சியடைவர்!

### இப்படிப் பொன்சேகா எச்சரிக்கை



"ஆட்சியாளர்கள் உறங்கிக்கொண்டிருந்தால் விடுதலைப் புலிகள் அமைப்பு மீள் எழுச்சி பெறக்கூடிய

04





### கொழும்பு மாநகரம் உட்பட

# 100 சபைகளில் எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்கும்

### நளின் பண்டார எம்.பி. நம்பிக்கை

"கொழும்பு மாநகர சபை உட்பட சுமார் 100 சபைகளில் ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்கும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கொழும்பின் அதிகாரம் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சிகள் வசமாகும் என்பதை ஸ்திரமாகக் கூறுகின்றேன். நான் குருநாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தினாலும் கொழும்பில் ஆட்சியமைப்பதற்கான

03



## தமிழரசு - முன்னணி இன்று சந்திப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையிலான முக்கிய சந்திப்பு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

04



# அரசின் அச்சுறுத்தலுக்கு அடிபணியவே மாட்டேன்!

## அமைச்சர் பிமலை உடனே கைது செய்து விசாரிக்குமாறும் கம்மன்பில வலியுறுத்து



"அரசின் குறைகளைச் சுட்டிக்காட்டுவதால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக என்னை அச்சுறுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது. பரிசோதனைகள் ஏதுமின்றி சட்டவிரோதமான முறையில் 323 கொள்கலன்களைச் சுங்கத்தில் இருந்து விடுவித்த அமைச்சர் பிமல் ரத்நாயக்கவைக் கைது செய்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளாமல் எனக்கு எதிராகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளிப்பது எந்த விதத்தில் நியாயமானதாகும்?

03




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் முறையற்ற விதத்தில் மதுச்சாலை உரிமங்கள் கண்மண் தெரியாமல் வழங்கப்பட்டமையும், அதன் பின்புலத்தில் அரசியல்வாதிகள் பலர் பல கோடி ரூபாவுக்கு ஒவ்வொரு உரிமத்தையும் (லைசென்ஸையும்) விற்றுப் பெருந்தொகை சுருட்டினர் என்று வெளியான செய்திகளையும் மக்கள் மறந்திருக்க முடியாது.

அந்தப் பெரும் மோசடியின் உண்மை விவரங்கள் வெளிவரவில்லை. தேசிய மக்கள் சக்தி தாங்கள் ஆட்சிக்கு வந்ததும், அந்த மோசடிகளில் ஈடுபட்ட பிரகிருதிகளை அம்பலப்படுத்துவோம் என்று பிரதிக்ஞை செய்திருந்த போதிலும், இற்றைவரை காத்திரமான எந்த விடயத்தையும் வெளிப்படுத்தவில்லை.

03

# போருக்கு அஞ்சி படகு மூலம் இந்தியா சென்றவர் 38 வருடங்களின் பின் நாடு திரும்பிய போது கைது

## இனி அகதிகள் நாடு திரும்பப் பின்னடிக்கும் நிலை வரலாம்

(ந.லோகதயாளன்)

போர்க்காலத்தில்உயிரைக்காக்கதமிழகத்திற்குத் தப்பிச் சென்றவர் 37 ஆண்டுகள் கடந்து நாடு திரும்பியபோது சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறிய குற்றச் சாட்டின் கீழ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சின்னையா சிறிலோகநாதன் என்னும் ஏழாலையைச் சேர்ந்த 75 வயது முதியவர் யாழ்ப்பாணம் விமான நிலையம் ஊடாக நேற்றைய தினம் நாடு திரும்பியபோதே விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின் காரணமாக உயிரை காக்கும் நோக்கில் லட்சக்கணக்கானோர் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றபோது 1987 ஆம் ஆண்டு படகு மூலம் இவர் தமிழகத்திற்கு தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறு தப்பிச் சென்றவர் தமிழகத்தின் திருவண்ணாமலைப் பகுதியில் உள்ள முகாமில்

தங்கி வாழ்ந்து தற்போது ஏழாலையில் வசிக்கும் தனது மகனுடன் முதுமைக் காலத்தில் வாழ்வதற்காக ஐக்கிய நாடுகளின் அகதிகளிற்கான அமைப்பில் யு.என்.எச்.சி.ஆர் பதிவு செய்து தாயகம் திரும்பியபோதே நேற்றைய தினம் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனால் இனி வரும் காலத்தில் தாயகம் திரும்பும் அகதிகள் கைது செய்யப்படுவார்களா என்ற அச்சம் எழுப்பப்படுகின்றது.




# மன்னார்ப் பொது வைத்தியசாலையை மத்திய அரசின் கீழ் கொண்டு வருவதா?

## மாகாண அதிகாரங்களைப் பிடுங்கும் வேலை எனசத்தியலிங்கம் எம்.பி. சீற்றம்



(கி.வசந்தன்)

மாகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வரும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வருவதானது மாகாண சபையின் அதிகாரத்தை மத்திய அரசுக்கு மீளகையளிப்பதாக அமையும் என தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இவ்வாறான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டமை தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் உரிமைப் போராட்டத்திற்கு கிடைத்த முதலாவது அரசியல் யாப்பு ரீதியான தீர்வே மாகாண சபை முறைமையாகும். தமிழ் மக்களுக்கான இறுதித் தீர்வாக மாகாண சபை முறைமை அமையாது விடினும் ஓரளவுக்கேனும் தம்மைத் தாமே ஆளும் அதிகாரம் மாகாண சபை சட்டத்தில் உள்ளது.

மாகாண சபையிடம் மாகாண சுகாதார துறையை அபிவிருத்தி செய்வதற்கான போதுமான நிதி வளம் இல்லையென்பதால் மத்திய அரசின் கீழ் கொண்டு செல்வதாகக் காரணம் முன் வைக்கப்படுகின்றது. மாகாணசபை சுயமாக இயங்கக் கூடிய வகையில் அதனை பலப்படுத்துவது மத்திய அரசின் கடமையாகும்.

இதுவரை மாகாணத்திற்கான நிதியை திரட்டக் கூடிய வகையிலான எந்தவிதமான விசேட திட்டங்களையும் மத்தியில் ஆட்சி செய்த அரசாங்கங்கள் செய்யவில்லை. மாறாக வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கொண்டு மாகாணத்திற்கான அந்நிய செலாவணியை ஈட்டக் கூடிய வகையிலான திட்டங்கள் வகுக்கப்பட்ட போதிலும் அதனை நடைமுறைப்படுத்தவதற்கு மத்திய அரசு மறைமுகமாகப் பல தடைகளைப் போட்டது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பாரிய வளப்பற்றாக்குறை உள்ளது என்பது மறுக்க முடியாது உண்மையாகும். ஆனாலும் அதனை சீர்செய்வதற்காக வைத்தியசாலை நிர்வாகத்தை மத்திய அரசின் கீழ் கொண்டு வருதென்பது தீர்வாக அமையாது.

13 ஆவது திருத்தச் சட்டத்தில் குறிப்பாக சுகாதாரம், கல்வி, விவசாயம் போன்ற துறைகள் மாகாண சபையின் நேரடி நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்றன. ஏற்கனவே தேசிய பாடசாலைகள் என்ற போர்வையில் மாகாண கல்வி அமைச்சின் கீழ் இயங்கி வந்த முன்னணிப் பாடசாலைகள் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் ஏற்படும் ஆபத்தினை அறியாதவர்களாய் எம்மவர்களும் துணையே போயுள்ளனர் என்பது கவலைக்குரிய விடயமாகும்.

மாகாண வைத்தியசாலைகள் மத்திய அரசின் கீழ் கொண்டுவரப்பட்டாலும் சுகாதார துறைக்கான அபிவிருத்திக்கு பெரும்பாலும் வெளிநாட்டு நிதியே பயன்படுத்தப்படுகின்றது. சுகாதாரத் துறையை பொறுத்துவரை பன்னாட்டு நிதி வழங்கும் நிறுவனங்களான ஆசிய அபிவிருத்தி வங்கி, உலகவங்கி என்பன தொடர்ச்சியாக நிதி வழங்கி வருகின்றன. மத்திய அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளும் நிதியை மாகாண அமைச்சினூடாக வழங்குவதன் மூலம் மாகாண சுகாதார துறையை அபிவிருத்தி செய்ய முடியும்.

கடந்த காலங்களில் மாகாண சுகாதார அமைச்சராக நான் இருந்த போது மத்திய அரசாங்கத்தின் அனுமதியுடன் நெதர்லாந்து அரசாங்கத்தின் பாரிய நிதி பங்களிப்புடனான சுகாதார அபிவிருத்தி திட்டமொன்றினை வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தியிருந்தோம். ஆகவே மாகாண சுகாதார துறையை அபிவிருத்தி செய்வதற்கு அதனை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருவது ஒரு போதும் தீர்வாக அமையாது. மாறாக இருக்கும் அதிகாரங்களையும் மத்திய அரசாங்கம் கையகப்படுத்தவதற்கு நாமே வாய்ப்பினை வழங்கியதாக அமைந்துவிடும். கடந்த அரசாங்கங்கள் செய்த தவறை இந்த அரசாங்கமும் தொடர்கின்றதாக என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. - என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

அம்பலப்படுத்தவில்லை. எல்லாவற்றையும் மூடி மறைத்து சமாளிக்கும் போக்கே தொடர்கின்றது.

ஆயினும் இந்த விவகாரம் இப்போது ஆளும் தரப்பையும் மீறி வெளியாகக் கூடிய வாய்ப்புகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இப்படி மதுச்சாலை உரிமங்கள் பெரும் எண்ணிக்கையில், கண்மூடித்தனமாக வழங்கப்படுவதை ஆட்சேபித்து, tp2023 இல் நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

வழமை போல இலங்கையின் நீதித்துறையின் 'சாதனை மிக்க சுறு சுறுப்பின் அடிப்படையில்'(?) இப்போது இரண்டு ஆண்டுகள் கடந்து, அந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் விசாரணைக்கு வந்திருக்கின்றன.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட உயர்நீதிமன்றம், சட்டமுறைக்கு மாறாக புதிய மதுச்சாலை உரிமங்கள் வழங்கப்பட கூடாது என உத்தரவிட்டிருந்தது. எனினும், ரணிலின் அரசு, சட்டமுறைமைக்கு மாறாக மதுச்சாலை உரிமங்கள் வழங்குவதற்கே நீதிமன்றம் தடை விதித்து இருக்கின்றது என்று விளக்கம் அளித்து, சட்டரீதியாகத் தான் உரிமங்களை வழங்குவதாகக் குறிப்பிட்டு, தொடர்ந்து அந்த உரிமங்களை வழங்கி வந்தது.

இப்போது நான்கு அடிப்படை உரிமை மீறல் மனுக்களும் நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. நேற்றும் தொடர்ந்து விசாரணை நடைபெற்றது. இனி வரும் திங்கட்கிழமை விசாரணை நடக்கும்.

இந்த விசாரணையில் இரண்டு விடயங்கள் இப்போது வெளிவந்திருக்கின்றன.

ஒன்று - கடந்த செப்டம்பரில் அதிகாரத்துக்கு வந்த புதிய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க, அதற்கு அடுத்த மாதம், அதாவது கடந்த ஒக்டோபரில், நிதியமைச்சர் என்ற முறையில் இந்த உரிமங்கள் வழங்கியமை தொடர்பான கோப்புகள் யாவற்றையும் கலால் திணைக்கள ஆணையாளரிடமிருந்து முழுமையாக தனது கட்டுப்பாட்டுக்கு எடுத்து விட்டார். அப்படி முழுக் கோப்புகளையும் ஜனாதிபதி அலுவலகம் அள்ளிக்கொண்டமை தொடர்பான விவரங்கள் அடங்கிய ஆவண விடயங்களை இந்த வழக்கின் மனுதாரர் தரப்பு ஒன்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றது. இந்தக் கோப்புகளை எடுப்பதற்காக ஜனாதிபதியின் செயலாளர் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதியும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அது மாத்திரமல்ல, ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் எந்த மதிச்சாலை உரிமங்களும் புதிதாக வழங்கப்படக் கூடாது என உத்தரவிட்டிருக்கின்றார் என்ற விடயமும் வெளியாகி உள்ளது.

தவிரவும், ரணிலின் ஆட்சிக் காலத்தில், கடந்த ஆண்டு இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, கலால் திணைக்களம் சார்பில் ஒரு முக்கிய ஆவணம் நீதிமன்றத்திற்கு கையளிக்கப்பட்டது. நீதியரசர்களின் கவனத்துக்கு மாத்திரமான இரகசிய விடயம் என்ற குறிப்புடன் ஆவணம் ஒன்று கடித உறையில் சீலிட்டு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் உள்ளடக்கம் இன்னமும் வெளியே வரவில்லை.

இந்த நான்கு அடிப்படை உரிமை மீறல்கள் வழக்கில் ஒன்றின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் திங்களன்று முன்னிலையாகி வாதிட இருக்கின்றார்.

மேற்படி எதிர்மனுதாரர்கள் சமர்ப்பித்த ஆவணம் ஒன்று மூடிய உறைக்குள் சீலிட்டு இருக்கையில், தாம் இருட்டில் சட்டவாதம் நடத்த முடியாது என்று திங்களன்று தனது வாதத்தின் போது சுமந்திரன் தெரிவிப்பார் எனத் தெரிகிறது.

அச்சமயத்தில் அந்த சீலிட்ட உறையில் உள்ள இரகசிய ஆவணம் நீதிமன்றத்தில் வெளிப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அந்த விடயம் இந்த மதுச்சாலை உரிமம் வழங்குவதில் சம்பந்தப்படுள்ள ஊழல் பேர்வழிகளை - பெருச்சாளிகளை - இதன் மூலம் பணம் சுருட்டிய அரசியல்வாதிகளை - சில சமயங்களில் அம்பலப்படுத்தக் கூடும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்படுகிறது. அத்தகைய சூழலில் திங்கட்கிழமை முக்கிய விடயங்கள் வெளியாகலாம் என நாமும் எதிர்பார்த்துக் காத்திருப்போம்.

---

## 100 சபைகளில்...

பலத்தை வழங்குவேன்.

காரணம் கொழும்பு மாநகர சபை என்பது நாட்டினதும் கட்சியினதும் இதயம் போன்றதாகும். அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாம் அதிகாரத்தைக் கைப்பற்றிய இடமாகும். அதனைப் பாதுகாத்துக்கொள்வதற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

கொழும்பில் ஆட்சியமைப்பதற்கு அரசும் பல திசைகளிலும் வலை வீசிக் கொண்டிருக்கின்றது. எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாமும் எம் தரப்பில் சகல முயற்சிகளையும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம்.

ஓரிரு சுயேச்சைக் குழுக்கள் தேசிய மக்கள் சக்தி அரசுக்கு ஆதரவைத் தெரிவித்துள்ள போதிலும், பெரும்பாலானோர் எம்முடன் இணைந்துள்ளனர். ஆட்சியமைத்த பின்னர் ஆளும் தரப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் அவர்களது தொகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுப்பதற்கான நிதியை வழங்குவோம். அது இலஞ்சம் அல்ல.

தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாநகர சபை மேயர் வேட்பாளரை அந்தக் கட்சியினரே விரும்பவில்லை. எனவே, அரசால் தமது மேயரை நியமிக்கக் கூடிய சூழல் இல்லை. மேயர் தெரிவுக்கான வாக்கெடுப்பின்போது தேசிய மக்கள் சக்தியின் சில உறுப்பினர்கள் வாக்களிப் பைப் புறக்கணிப்பதற்கான வாய்ப்பிருக்கின்றது. எனவே, கொழும்பில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சிகளே ஆட்சியமைக்கும்." - என்றார்.

---

## அரசின்...

அச்சுறுத்தல்களால் அடிபணியப் போவதில்லை என்பதை அரசிடம் தெரிவித்துக்கொள்கின்றேன்."

- இவ்வாறு பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் காரியாலயத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது"-

"பரிசோதனைகள் ஏதுமின்றி சுங்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் தொடர்பான உண்மையை அரசு இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. இந்தக் கொள்கலன்களை விடுவிப்பதற்குத் தான் பணித்ததாக கப்பல் துறை அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டிருந்தார்.

சுங்கத் திணைக்களம் கப்பல் துறை அமைச்சின் விடயதானங்களுக்குள் உள்ளடங்காது. ஜனாதிபதியின் வசமுள்ள நிதி அமைச்சின் விடயதானத்துக்குள் உள்ளடங்கும். ஆகவே, அமைச்சர் பிமல் ரத்நாயக்க சட்டவிரோதமான முறையில் இந்தக் கொள்கலன்களை விடுவிப்பதற்குப் பணித்துள்ளார். ஆகவே, அவரை உடன் கைது செய்து விசாரிக்குமாறு குறிப்பிட்டேன்.

பரிசோதனையின்றி விடுவிக்கப்பட்ட 323 கொள்கலன்கள் குறித்து நான் குறிப்பிட்ட விடயங்களுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியின் ஆதரவாளர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளித்துள்ளார்கள். சட்டவிரோதமாகச் செயற்பட்டுள்ள அமைச்சர் பிமல் ரத்நாயக்கவைக் கைது செய்து விசாரணை செய்வதை விடுத்து என் மீது முறைப்பாடு அளிப்பது எந்த விதத்தில் நியாயமாகும்?

இந்தக் கொள்கலன்கள் தொடர்பில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் சுங்கத் திணைக்களத்திடம் முன்வைத்த கேள்விகளுக்குச் சுங்கத் திணைக்களம் 'தாங்கள் கோரிய கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்குரிய ஆவணங்கள் தற்போது சுங்கத் திணைக்களத்திடம் இல்லை' என்று எனக்குப் பதிலளித்துள்ளது. தற்போது இல்லையாயின் ஆரம்பத்தில் அந்த ஆவணங்கள் இருந்துள்ளன. தற்போது காணாமல் ஆக்கப்பட்டுள்ளன என்றே கருத வேண்டும்.

அரசின் குறைகளைச் சுட்டிக்காட்டுவதால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் ஊடாக என்னை அச்சுறுத்துவதற்கு அரசு முயற்சிக்கின்றது. அச்சம் என்பதொன்று இருக்குமானால் இந்த அரசுடன் நான் மோதியிருக்க மாட்டேன் என்பதை ஜனாதிபதியிடமும் அரசிடமும் தெரிவித்துக்கொள்கின்றேன்." - என்றார்.

# சட்டத்துக்கமைய சகல கள்வர்களும் சிறையில் அடைக்கப்படுவார்கள்!

## அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி உறுதி



"சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட வகையிலேயே கள்வர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. அந்தவகையில் கள்வர்கள் பிடிப்பதில் தாமதம் என்ற மக்களின் அதிருப்தியை நாம் ஏற்கின்றோம். சட்டத்தின் பிரகாரம் அனைத்து கள்வர்களும் சிறையில் அடைக்கப்படுவார்கள்."

– இவ்வாறு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

கொழும்பு தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய மக்கள் சக்தியினர் பதவி, பட்டங்களுக்காக அரசியல் செய்யும் நபர்கள் கிடையாது. எவரும் பதவிகளைக் கேட்டுப் பெறுவதில்லை. கட்சியால் பதவிகள் கையளிக்கப்படும். அந்தப் பொறுப்பு சரியாக நிறைவேற்றப்படும். அதற்காக அர்ப்பணிப்புடன் தோழர்கள் செயற்படுவார்கள்.

தேசிய மக்கள் சக்தியினருக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தை வழங்கியும், கள்வர்களைப் பிடிப்பதில் அவர்கள் வேகம் காட்டவில்லை, கள்வர்களைச் சிறையில் அடைக்கவில்லை என்ற கவலை மக்கள் மத்தியில் உள்ளது. அதனை நாம் ஏற்கின்றோம்.

நாம் ஆயுதப் புரட்சி மூலம் ஆட்சியைப் பிடிக்கவில்லை. கியூபா மற்றும் வட கொரியாவில் நடந்ததைப் போன்றும் ஆட்சியைப் பிடிக்கவில்லை. ஜனநாயகம், சட்டம் மற்றும் அரசமைப்பின் பிரகாரமே தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்துள்ளது. எனவே, சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட வகையிலேயே செயற்பட வேண்டியுள்ளது. அதன் பிரகாரம் நாம் செயற்பட்டு வருகின்றோம். மேர்வின் சில்வா, கெஹலிய ரம்புக்வெல, பிரசன்ன ரணவீர உள்ளிட்டவர்கள் சிறையில் உள்ளனர். சட்டம் உரிய வகையில் செயற்பட்டு வருகின்றது. அது உரிய வகையில் செயற்படுத்தப்படும். அனைத்து கள்வர்களும் சிறையில் அடைக்கப்படுவார்கள்." – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஆட்சியாளர்கள்...

அச்சுறுத்தல் உள்ளது." – என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"கனடாவில் தமிழின அழிப்பு நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது. சர்வதேச அழுத்தங்கள் தொடர்கின்றன. எனவே, விடுதலைப் புலிகள் அமைப்பு வடக்கு, கிழக்கில் மீள தலைதூக்குவதற்குரிய சாத்தியம் உள்ளதா?' எனக் கொழும்பு தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போது பொன்சேகாவிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த சரத் பொன்சேகா,

"வடக்கிலுள்ள சில அரசியல்வாதிகள் வாக்கு வேட்டைக்காகத் தனி இராஜ்ஜியம் அமைக்கப்படும் என்ற உறுதிமொழியை இன்றளவிலும் வழங்கி வருகின்றனர். சுயநிர்ணய உரிமை பற்றி கதைக்கின்றனர்.

அப்படியான விஷக்கிருமிகள் இருக்கும் நிலையில், நாட்டில் பலவீனமான தலைவர் உருவாகி, நாடு பலவீனமாகி, வீழ்ச்சியடைந்தால் நிச்சயம் அப்படியான பிரச்சினைகள் எழுவதற்குரிய சாத்தியம் உள்ளது." – என்றார்.

படைக் குறைப்பு தொடர்பில் மேற்படி ஊடகம் எழுப்பிய கேள்வியொன்றுக்கு,

"எமது நாட்டு தேசிய பாதுகாப்பு என்பது ஐ.எம்.எப்பின் பொறுப்பு அல்ல. அது அரசின் பொறுப்பு. எனவே, தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். படைக் குறைப்பு யோசனையுடன் உடன்பட முடியாது." – என்று பொன்சேகா திட்டவட்டமாக அறிவித்தார்.

கனடாவில் அமைக்கப்பட்டுள்ள தமிழின அழிப்பு நினைவகம் பற்றியும் சரத் பொன்சேகாவிடம் வினவப்பட்டது.

"சில தமிழ் டயஸ்போராக்கள் விசாவுக்காகவும், தமது வியாபாரத்தை விஸ்தரித்துக்கொள்வதற்காகவும் இலங்கையில் கொடுமைகள், சித்திரவதைகள் நடப்பதாகக் கூறி வருகின்றனர். தாம் இலங்கைக்குச் சென்றால் இன்னல்களைச் சந்திக்க நேரிடும் எனக் கூறி அதற்காகப் பல வேலைத் திட்டங்களை அவர்கள் முன்னெடுக்கின்றனர்.

இலங்கையில் இனப்படுகொலை நடந்துள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்களைத் தற்போதைய அரசு போலவே கடந்தகால அரசுகளும் நிராகரித்துள்ளன." – என்று முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா பதிலளித்தார்.

### தமிழரசு...

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சியமைப்பது குறித்துக் கலந்துரையாடும் நோக்கில் இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மற்றும் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகியோரும், பங்கேற்கவுள்ளனர்.



# போலந்து வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி அநுரவுடன் சந்திப்பு

இலங்கைக்கு வருகை தந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றிய கவுன்சில் தலைவர், போலந்து குடியரசின் வெளிவிவகார அமைச்சர் ரடொஸ்லாவ் சிகோர்ஸ்கி நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இலங்கை மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இடையிலான ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக் கொள்வது தொடர்பில் இதன்போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதுடன், எதிர்வரும் காலங்களில் உலக அளவில் இலங்கை எதிர்கொள்ள வேண்டியுள்ள சவால்களை வெற்றிகொள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்பதையும் ஜனாதிபதி இதன்போது வலியுறுத்தினார்.

அமெரிக்காவினால் விதிக்கப்பட்டுள்ள வரி முறைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வரம்புகளுக்குள் செயலாற்றும்போது இலங்கை எதிர்கொள்ளும் சவால்களுக்கு மத்தியில் ஐரோப்பிய ஒன்றியத்துடன் பரந்த ஒத்துழைப்புடன் செயலாற்ற எதிர்பார்த்திருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார்.

இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கும் GSP+ நிவாரணத்தை தொடர்ச்சியாக வழங்குவது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் கொண்டுள்ள முன்னேற்றகரமான நிலைப்பாட்டை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இதன்போது வரவேற்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த, போலந்து வெளிவிவகார அமைச்சர் ரடொஸ்லாவ் சிகோர்ஸ்கி , தனது சுற்றுப் பயணம் ஐரோப்பிய ஒன்றியத்தை போலவே இலங்கை மீது போலந்து கொண்டிருக்கும் சிறப்பு அவதானத்தை காண்பிக்கிறது என்றும் தெரிவித்தார்.

இலங்கை – போலந்து வரலாற்று தொடர்புகளை மேலும் பலப்படுத்திக் கொண்டு இருநாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக்கொள்வது குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கை மற்றும் போலந்துக்கு இடையில் 50 வருட இராஜதந்திர தொடர்புகள் மற்றும் 30 வருட அபிவிருத்தி ஒத்துழைப்பு வேலைத் திட்டங்களை இங்கு நினைவுகூர்ந்த போலந்து வெளிவிவகார அமைச்சர் புதிய அரசாங்கத்தோடு நெருக்கமான ஒத்துழைப்புடன் செயலாற்றுவதே போலந்து அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும் என்பதையும் கூறினார்.

இதன்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை தூதுவர் கார்மென் மொரெனோ உள்ளிட்ட தூதுக்குழுவினரும், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் ரோஷன் கமகே உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தனர். (ய)











நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேவை: நீதியான விசாரணை

ஜனாதிபதிகள் மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் ஆட்சிக் காலங்களில் பெரிதும் ஆட்டம் போட்ட முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு 20 வருட கடூழியச் சிறைத் தண்டனையும், முன்னாள் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருட கடூழியச் சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த உத்தரவை நேற்றுப் பிறப்பித்திருக்கின்றது.

2015 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் - 2014 செப்டம்பர் முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31ஆம் திகதிக்கும் இடையேயான காலப்பகுதியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக கரம் போட்டுகள் உள்ளிட்ட விளையாட்டுப் பொருள்களை அரச நிதியில் கொள்வனவு செய்து, வியோகித்து, சுமார் ஐந்தரைக் கோடி ரூபா அளவுக்கு மோசடி செய்தனர் என இவர்கள் மீது குற்றம் சுமத்தி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இருந்தது.

2015 ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றி ஈட்டிய பின்னர், அதற்கு முன்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற மோசடிகள், ஊழல்கள், குளறுபடிகள் குறித்து விசாரித்து வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அப்படி 2019 இல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஒன்றிலேயே இந்த இரு முன்னாள் அமைச்சர்களும் இப்போது சிக்கி இருக்கின்றனர்.

எனினும் மேல்முறையீட்டின் பேரில் அவர்கள் வெளியே வரக்கூடிய வாய்ப்புகள் உண்டு.

இதே ஜனாதிபதித் தேர்தலில் - 2014 இறுதியில் - இதே போன்று இடம்பெற்ற ஓர் ஊழல் தொடர்பான வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட மற்றைய இரு பிரபலங்கள் பின்னர் மேன்முறையீட்டில் விடுவிக்கப்பட்டமை கவனிக்கத்தக்கதாகும்.

அந்தத் தேர்தல் சமயத்தில் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவில் இருந்த 60 கோடி ரூபா பணத்தை எடுத்து பௌத்த பிக்குகளுக்குரிய 'சில்' ஆடைத் துணிகளை வாங்கி, விநியோகித்து, நிதிவிரயம் செய்தார்கள் என்று மேற்படி தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவின் தலைவர் அனுஷ பல்பிட்ட மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளராக இருந்த லலித் வீரதுங்க ஆகியோர் மீது குற்றம் சுமத்தப்பட்டு, 2017 செப்டம்பரில் அவர்களை கொழும்பு மேல் நீதிமன்றம் குற்றவாளிகளாகக் கண்டது. இருவருக்கும் மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து, தலா 20 லட்சம் ரூபா அபராதம் மற்றும் தலா ஐந்து கோடி ரூபா நஷ்ட ஈடு செலுத்தும் படி நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆயினும் மேன்முறையீட்டில் 2020 நவம்பரில் இருவரையும் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் விடுவித்துத் தீர்ப்பளித்தது.

இப்போதும் கூட இரண்டு முன்னாள் அமைச்சர்களுக்கு எதிரான இந்த வழக்குகளிலும் அவர்கள் மேல்முறையீட்டில் தப்புவதற்கான வாய்ப்புகள் உண்டு.

ஆயினும் 'உப்புச் சாப்பிட்டவன் தண்ணி குடித்தாக வேண்டும்' என்பது போல இலங்கை அரசியலில், மக்கள் பணத்தை வீண்விரயம் செய்து, லஞ்சம், ஊழல், மோசடி, குளறுபடிகளிலும் நிர்வாக சீர்கேடுகளிலும் ஈடுபட்ட தரப்பினர் தண்டிக்கப்பட்டேயாக வேண்டும்.

இந்தக் குளறுபடிகள் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட்டு, தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்பட்டு, நீதி நிலை நாட்டப்பட வேண்டும்.

2022 இல் நாடு மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் விழுவதற்கு இத்தகைய அரசியல்வாதிகளின் மோசடிகளும், ஊழல்களும், குளறுபடிகளுமே பிரதான காரணம்.

ஆகவே இத்தகைய முறைகேடுகள் குறித்து நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும் - நல்லாட்சி அரசில் ஆரம்பிக்கப்பட்ட முயற்சிகள் - இந்த அரசிலும் தீவிரமாக தொடர வேண்டும். அப்படித்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் நிஜத்தில் விடயங்கள் முன் நகர்வதாகத் தெரியவில்லை.



# சீன வர்த்தக அலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி அநுரவை சந்தித்தார்

இலங்கைக்கு வருகை தந்துள்ள சீன மக்கள் குடியரசின் வர்த்தக அலுவல்கள் அமைச்சர் வங் வென்டாவோ, நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

தற்போது இலங்கையில் நிலவும் அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் செயல்படுத்தும் வெளிப்படையான வேலைத்திட்டம் காரணமாக சீன முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதில் அதிக ஆர்வம் காட்டுவதாக தெரிவித்த அமைச்சர், 100 இற்கும் மேற்பட்ட முதலீட்டாளர்களுடனான இந்த விஜயத்தின் மூலம் இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார ஒத்துழைப்பு மேலும் உறுதிப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

சவாலான காலகட்டத்தில் இரு நாடுகளுக்கும் பயனளிக்கும் வகையில், வர்த்தகம் மற்றும் பொருளாதார இலக்குகளை அடைவதற்கு ஒன்றிணைந்து செயல்படுவது குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டதுடன், உலகளாவிய பொருளாதார ஸ்திரமின்மையை எதிர்கொள்ளும் போது இலங்கைக்கு



தேவையான ஆதரவை வழங்க சீனா அரப்பணிப்புடன் செயற்படுவதாக சீன வர்த்தக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கடந்த சீன விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது சீன வர்த்தக அமைச்சரின் இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

மேலும், சீன அரசாங்கத்தின் ஆதரவுடன் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை விரைவாக நிறைவு செய்தல் மற்றும் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் இலங்கைக்கான சீனத் தூதுவர் சி ஷென்ஹாங், ஆசிய விவகார திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வன்ங் லிபிங், வெளியுறவுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஜூவேட்டிங் ஆகியோர் உள்ளிட்ட குழு சீன பிரதிநிதிகள் குழு சார்பாகவும், இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரோஷன் கமகே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.











இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம் பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடூரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் 'காலைக்கதிர்' நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

36

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



இதுவரை காலமும் எவ்வளவோ எதிர்ப்புகள், கஷ்டங்கள், இடைஞ்சல்கள் இடையிலும் அதிகாரப் பரவலாக்கலுக்காக 1956 இல் இருந்து 2009 வரையாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் நாட்டை இணக்கமாக ஒரு புது நோக்கில் கொண்டு செல்ல தவறியமை ஏன் என்ற கேள்வியைத்தான் நாட்டின் புத்திஜீவிகளும், சர்வதேசமும் ஓர் 'ஆன்ம தேடலாக' இன்றும் பதிலுக்காக ஏங்கிக் கொண்டிருக்கின்றனர்.

**இந்த நிலைமை ஏன்?**

**இதற்கான பதில் தான் என்ன?**

அதற்கான வழிகள், மார்க்கம் எது என என்னிடம் கேட்டால், அதற்கு என் போன்றவர்கள் பதில் தருவது முடியாது.

எனது அனுபவங்களில், நான் பார்த்தவைகளில், அவற்றின் வரலாற்றைப் பதிகிறேன். பொது வாழ்வில் அரசியல்வாதியாக மக்களுடன் ஊடாடியவன் அல்லன். பின்னணியில் உந்து சக்திகளாக, ஆலோசனை தருபவர்களாக, பார்வையாளர்களாக இருந்திருக்கிறோம். இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுப் பயணிக்க வேண்டும் என்று அன்றிருந்தோர் எல்லோரிடமும் ஊடாடியவன். இந்தியாவுடன் முரண்பாடு தேவையற்றது, அனுசரணையானவர்களாக ஆக்கிக் கொள்வது முக்கியம் எனப் பரிவுகள் செய்தவன். பின் நோர்வே பேச்சு வார்த்தைகளிலும் ஆதங்கம் காட்டியவன்.

ஆனால் எனது இவ்வளவு ஆண்டு கால அனுபவங்களிலும் படிப்பினைகளிலும் ஒன்றை மட்டும் சொல்லுவேன்.

தமிழ் மக்கள் இந்த நாட்டில் ஏதோ ஒரு 'பொருளாக', 'ஜடங்களாக' பார்க்கப்படுகிறார்களே ஒழிய, நாட்டின் 'குடிமக்கள்' என்ற முறையில் (வாக்குகள் தேவையான நேரங்கள் தவிர்த்து) பார்க்கப்படுவதில்லை.

எனது பார்வையில் இன்றும் தமிழர்கள்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் தலைமையுரை வார்த்தைகளை அசை போடுகிறார்கள்.

“எங்களுக்காக நாங்கள் எவ்வளவு மாற்றங்களை குடியரசமைப்பில் பெற்றுக் கொள்ள முடியுமோ அதை அடைந்து கொள்ள விரும்புகிறோம்” அந்த மாற்றங்களுக்காக –

“எங்களுடைய வாழ்க்கைகளை நாமே நிர்வகிக்கவும், அதில் நாங்கள் எங்கள் தவறுகளை மேற்கொள்ளவும், அனுபவங்களால் அறிவு பெறவும், அவற்றால் தன்னம்பிக்கையையும் சுயமரியாதையையும் வளர்க்கவும் விரும்புகிறோம். இவை எங்களது தேசிய வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் இன்றி அமையாதவை.

“எப்படி மற்ற மக்கள் தங்களது சுயமரியாதையுடன் தங்களைத் தாங்களே நிர்வாகம் செய்து, பலத்துடன் தங்கள் நாடுகளிலேயே மதிக்கப்பட்டு, அதே போல வெளிநாடுகளிலும் மதிக்கப்படுவது போல வாழ்வதற்கான முன்னேற்றங்கள் பெறுவதற்குரிய மாற்றங்களை (குடியரச அமைப்பில்) அடைந்து கொள்ள வேண்டும்.”

அந்த மாற்றங்களை தமிழ் மக்கள் தங்களது அபிலாசைகளாக வைத்தனர்.

சிங்கள மக்களின் மனோபாவம் அவர்களை அறிந்தோ, அறியாமலோ எழுந்தமானத்திலேயே தமிழ் மக்களுக்கு எதுவும் தரப்படுவதானால் அதை எதிர்த்து வன்மத்துடன் கிளம்பி போராடுவதால்தான் வழமையிலேயே தமிழர்களின் அபிலாசைகள் இவ்வாறு சீரழிந்து கிடக்கின்றன. அவர்கள் (தமிழர்கள்) தாங்கள் இலங்கைக்கு சுதந்திரம் கிடைக்கும் முன்னர் சுதந்திரமாக சிங்கள மக்கள் போல் அவர்களது பாரம்பரிய பிரதேசங்களில் இணைந்து வாழ்ந்தவர்கள் என்பதை மறந்து விடுவதில்லை.

தனித்துவம் என்பது ஓர் இடத்துடன் அல்லது மண்ணுடன் அடையாளப்படுத்தி இருப்பதும், அதனோடு ஒரு சரித்திரம் கொண்டதும் என்பதுதான்.

இதற்காகத்தான் தமிழ் மக்கள் ஏங்குகிறார்கள். அந்த ஏக்கங்களை முற்றாக அழித்து விட வேண்டும் என்பதற்காகவே இராணுவப் பலத்தால் விடுதலைப் புலிகள் மௌனமாக்கப்பட்டார்கள். அவர்கள் பலமிழந்தபின், தமிழரது அபிலாசைகள் எல்லாம் நிராசைகளாக்கப்பட்டு விட்டன என்ற உள்ளூற சிந்தனைகளில் சிங்கள மக்கள் வாழ்கிறார்கள்.

சர்வதேசங்களில் சிறு சிறு நாடுகளில் எத்தனையோ இனக் குழுமங்கள் இணக்கமாக, பல வருட காலங்கள் வாழ்கின்ற உதாரணங்களை சிங்கள மக்கள் தங்களது தசைகளிலும் மன உணர்வுகளிலும் தமிழர்களுக்கு எதிரானதாக இருக்கும் இனம் தெரியாத ஒருவித பயத்தில் ஏற்றுக் கொள்வதில்லை.

2001, செப்டம்பர் 11ஆம் தேதி அமெரிக்காவில் இரட்டைக் கோபுரத்தில் இடம்பெற்ற தாக்குதலை அடுத்து, ஆயுதம் தாங்கி அரசுகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த ஆயுதக் குழுக்கள் யாவற்றையுமே பயங்கரவாத அமைப்புகளாகப் பட்டியல் இடப்பட்டபின், அதனை சந்தர்ப்பமாகப் பாவித்து விடுதலை புலிகளையும் அப்படியே பட்டியலிட்டு, அவர்கள் பயங்கரவாதிகள், மக்கள் வேறு, பயங்கரவாதத்தை அழிப்பதற்கு இராணுவத் தீர்வு முன்னெடுக்கப்படுகிறது, அவர்கள் பயமுறுத்தி அடங்கி அவர்களுடன் கட்டாயத்தில் சிக்கியிருக்கின்றனர், அந்த மக்களை அவர்களில் இருந்து பிரித்தெடுக்கவே போர் நடத்தப்பட்டது என பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது. அந்தப் போரை நடத்தியே முடிக்கப்பட வேண்டுமென வன்மமாகவும் பிடிவாதமாகவும் நின்றது இன்றைய ஜே.வி.பி. தலைமை. போரின் பின்னும், அதிகாரப் பரவலை எதிர்த்து, மனிதாபிமான அவலங்களோ போர் குற்றங்களோ இடம்பெறவில்லை என்று நின்றவர்கள்.

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

தொடர்ந்து எவ்வாறு அதிகாரத்தை கைப்பற்றிக் கொள்ள முழு இனவாத அன்றில் இன மேலாதிக்க வழிமுறைகளை பாவித்தார்களோ, அதேபோன்று, இம்முறை நாடு வங்குரோத்தான நிலைமையைச் சாதகமாக்கி, வாக்கு வசீகரங்களுக்காக தமிழர் அபிலாசைகளையும் சேர்த்து, தேர்தல் பிரசாரங்கள் நடைபெற்றன. அவர்கள் தமிழர் அபிலாசைகளாக எவற்றை வடித்து, தமது தமிழ் அங்கத்தினருக்கு நம்பிக்கை ஊட்டுகிறார்கள் என்பதில் தெளிவு தரப்படவில்லை. அவ்வாறான அபிலாசைகள், அவர்கள் சிறுபான்மை இனத்தவர்கள், பெரும்பான்மையினர் தருவதை பெற்று, நல்லிணக்கம், சமதர்மம், சம உரிமை என வாழ்வாதாரங்களை நடத்துவதா? அன்றில் தனித்துவமான அடிப்படையில் இந்திய ஒப்பந்தம், சந்திரிகாவின் கால வரைவுகள், நோர்வேயின் சமாதான பேச்சுவார்த்தைகளின் அடிப்படை போன்றவற்றில் அவை நோக்கப்படுகின்றனவா?

இந்தத் தெளிவுகள் இருந்தால் சரியான திசை நோக்கிப் பயணிக்கலாம்.

“சுதந்திரத்துக்குப் பின்னான எழுபத்தாறு வருட அரசியலில் ஏனைய தேசிய இனங்களுடன் தொடர்புடைய வர்த்தமானி அறிவிப்புகளை வாபஸ் பெற்றதான வரலாறு என் கண்ணில் படவில்லை. (இருந்தால் அறியத் தாருங்கள்).அதனால் தான் எனது பதிவுகளில் நாடு அனுராவுடன் நிற்க வேண்டும், வடக்குக் கிழக்கில் ஊர்கள் தமிழ் பேசும் மக்களின் நலன் பேணுவோரோடு இருக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறேன்.

சுதந்திரத்தின் பின்னான நாட்டின் அரசியல், உயர் குழாத்தின் பிடியில் சிக்கி, வலது திசையாக பயணித்தது. 2024 இல் முதன்முறையாக இலங்கையின் அதிகார மையம் இடது புறமாக, இடது மைய அரசியலாக வர்க்க மாற்றத்தின் ஊடான பயணத்தை ஆரம்பித்திருக்கின்றது. இடது புறத்தில் மையம் கொண்ட இந்த மாற்றத்திற்கு கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். முரண்பாடுகள் இருந்தால் முட்டி மோதுங்கள். விமர்சியுங்கள். ஒன்றாய் இணைந்து அழுத்தத்தை பிரயோகியுங்கள்.

“இங்கே வர்த்தமானி மீளப் பெறும் இந்த அறிவிப்பு இரண்டு பிரதான விடயங்களை உணர்த்தி நிற்கின்றது.

“ஒன்று – தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஏனைய தேசிய இனங்களின் உரிமைகளுக்கு ஒப்பீட்டளவில் மதிப்பளிக்கிறது. அதனால் முரண்பாடுகளை அவர்களுடன் பேசித் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையை வலுப்படுத்தி இருக்கின்றது.

“இரண்டாவது – தமிழ்க் கட்சிகள் அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள் மக்களின் நலனை முதன்மையாகக் கொண்டு ஒன்றாய் எழுந்தால் சாதிக்க முடியும் என்பதை உணர்த்தி இருக்கிறது.” – என நடராஜா குருபரன் பதிந்த நீண்ட பதிவைப் பார்த்தேன்.

அநுராவின் அரசாங்கம் இதுவரை இணக்கத்தைப் பேசுகிறது. இணக்க சூழ்நிலைகளை ஏற்படுத்தி உள்ளது. அது ஏற்றுக்கொள்ள தக்கதுதான். ஆனால் இணக்க அடிப்படை எந்த அபிலாசையைத் தரும் என்பதை குருபரன் பதியவில்லை. ஏற்கனவே ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற்கு காலத்தைக் காட்டி கிடப்பில் போடப்பட, ஏன் அவ்வளவு அவசரமாக இந்த வர்த்தமானி புறப்பட்டது என்பதையும் தெளிவாக்கவில்லை. தமிழ் மக்களும் தங்களது அபிலாசைகள் விடயத்தில் எந்த அடிப்படையானாலும் சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையலாம்?

அந்த வர்த்தமானியைப் பற்றி பேசும் போது காணி அமைச்சர் லால்காந்த, அளவீடுகளை மேற்கொள்வதற்காகவே வர்த்தமானி வெளியிடப்பட்டது எனவும், தமிழ்த் தேசியக் கட்சிகளைச் சாடி, அவர்கள் இன வாத முரண்பாடுகளில் தமிழ் மக்களைத் திசை திருப்புகிறார்கள் என்கிறார். முரண்பாடுகளை, பேசித் தீர்க்க வேண்டிய பகுதிகளின் கருத்தூலங்களையே புறம் தள்ளி, அவர்கள் இனவாதிகள் என ஓரம் கட்டப்பட்டால், விடுதலைப் புலிகளின் காலத்தில் பயங்கரவாத முத்திரையிடப்பட்டு புலிகள் தனிமைப் படுத்தப்பட்டமை போல, தமிழ்த் தேசியம் பேசும் இவர்களையும்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

இனவாதிகளாகத் தனிமைப்படுத்தி, வெளிவிவகார அமைச்சர் விரும்பும் இனவாத சட்டங்களின் கீழ் இவை அடக்கப்பட்டு, தேசிய மக்கள் சக்தி தனது அடிப்படைக் கொள்கையில் தமிழ் மக்களை சிறுபான்மையினராக நடத்தி அந்த திசையில் கொண்டு செல்லுமா?

நான் முன்னர் குறிப்பிட்டபடி, வடக்குக் கிழக்கின் காணி விடுவிப்புக்கும், படைகளின் ஆளணி குறைக் கப்படுவதற்கும், இராணுவ முகாம்கள் நீக்கப்படுவ தற்கும் எதிராக முன்னைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தனது நண்பரான ஜனாதிபதிக்கு அறிவு ரைகள் தருகிறார். அவற்றைத் தற்சமயம் நாட்டின் பாதுகாப்புக் கருதி பொது வெளிகளில் கருத்தியல்களா கவும் முன்வைக்கிறார். புலம்பெயர் தமிழர்களை ஒட் டியும், அங்கு புகலிடக் கோரிக்கையாளர்கள் தங்களது நிரந்தரப் பதிவிடம் தேடி சமர்ப்பிக்கத் தேவையான ஆவணங்களுக்காக நாட்டில் சமாதானம் உருவாக வில்லை என்று வன்முறையைத் தூண்டுவார்கள், அதற்கு சாத்தியங்கள் அதிகம் உண்டு எனப் பெரும் பீதியைக் கிளப்புகிறார்.

அதேசமயம் பாதாள குழுக்களின் வன்முறைகள் தொடர்கின்றன. நேற்றைய பாணந்துறை துப்பாக்கிச் சூட்டுடன் இந்த வருடத்தில் அத்தகைய சம்பவங்கள் ஐம்பதை எட்டி உள்ளன. அவர்களைக் கட்டுப்படுத்த புலனாய்வுப் பிரிவினரில் நம்பிக்கையானவர்கள் அமர்த்தப்பட வேண்டும் எனவும் கூறுகிறார். தான் பார்க்கும் கோணத்தில் இந்த நாட்டின் மற்றவர்கள் பார்ப்பதில்லை, பிரபாகரன் நாட்டின் அமைதிக்காக போராடவில்லை, ஆனால் தேசிய போர் வீரர் தினத்தில் ஜனாதிபதி அமைதிக்காகவே அனைவரும் போராடி னார்கள் என்று கூறினால் அதை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், அவர் கூறியதைக் கேட்டுக் கொண்டிருந்தேன், அந்த இடத்தில் ஓடிச்சென்று கூச்சலிடுவதற்கு நான் முட்டாள் அல்லன் என்றார்.

குருபரன் கூறுவது போல நாடு அநுராவுடன் இருக்க வேண்டுமானால் காணி விடுவிப்புகள் பற்றி குருபரனது ஆலோசனைகளை ஜனாதிபதி கேட்பாரா? அன்றில் நண்பர் சரத் பொன்சேகாவை – தங்களுக்காக விடுதலைப் போரில் நடத்தி வெற்றி கண்டவரின் – ஆலோசனையைச் செவிமடுப்பாரா?

இவர்களில் இருந்து ஜனாதிபதி வெளியேறாது, அவரின் எவ்வளவுதான் நல்லெண்ணங்கள் இருந்தா லும், அவற்றுக்கு தமிழ் மக்கள் இணக்கங்கள் தந்தாலும், அடிப்படை மனோபாவங்கள் மாறுவது என்னவோ கஷ்டம்தான்.

நேற்றைய பதிவில் 15 டிசம்பர் 2017-இல் இலங்கை யில் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளின் பின் அரசியல் கூட்டத்தை பொன்னம்பலம் அருணாசலம் ஒழுங்கு செய்தார் என குறிக்கப்பட்டு இருந்தது. அது தவறு. 15 ஆம் திகதி டிசம்பர் 1917-இல் அது நடந்தது. தவறுக்கு மன்னிக்கவும்.

(தொடரும்)




# நீர்கொழும்பு ஹொரணப் பிரதேசத்தில் ரயிலுடன் கெப் வாகனம் மோதி விபத்து

**(உடப்பு க.மகாதேவன்)**

நீர்கொழும்பு ஹொரண பிரதேசப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் ரயிலுடன் கெப் ரக வாகனம் ஒன்று மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன் போது கெப் வாகன சாரதிக்கு படுகாயம் ஏற்பட்டதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

பாதுகாப்புக் கடவையைக் கவனயீனமாகக் கடந்து செல்ல முற்பட்ட போது இந்து விபத்து ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மேலதிக விசாரணைகள் தொடர்கின்றன.









# மன்னார், செட்டிகுளம் பகுதி மக்களின் நன்மை கருதி மல்வத்து ஓயாத் திட்டத்தை துரிதப்படுத்த நடவடிக்கை

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தகவல்

(கி.வசந்தன்)

மன்னார் மற்றும் செட்டிகுளம் மக்களின் நன்மை கருதி மல்வத்து ஓயாத் திட்டத்தை துரிதப்படுத்த ஜனாதிபதியிடம் யோசனை முன்வைத்துள்ளார் என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி தலைமையில் நேற்று இடம்பெற்ற கூட்டம் தொடர்பில் கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்திற்கு தேவையான வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டம் சார்ந்த முன்மொழிவுகளை முன்வைத்து இருந்தேன். இதன்போது, மல்வத்து ஓயாத் திட்டத்தை துரிதப்படுத்தி நிறைவேற்ற வேண்டியதன் கட்டாயத்தையும் எடுத்துக் கூறியிருந்தேன். மன்னார் மாவட்டத்தில் முள்ளிக்குளம் மற்றும் பாலம்பிட்டிக்கு இடையிலான பாதை தொடர்பாகவும் பேசியிருந்தேன். 12 கிலோ மீற்றர் வீதியில் இந்த வருடம் 2 கிலோ மீற்றர் போடப்படவுள்ளது. மிகுதி 10 கிலோ மீற்றர் வீதியை கபொற் இடுவதற்கு முன்மொழிந்து இருந்தேன். இந்தப் பகுதி மக்கள் தமது அரச சேவைகளை மேற்கொள்வதற்கு இந்த வீதி சீரின்மையால் மேலதிகமாக 70 கிலோ மீற்றர் தூரத்தில் பயணிக்க வேண்டியுள்ளது. அதனை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி அடுத்த வருடம் நிதி ஒதுக்குவதாகக் கூறியிருந்தார்.

அதுமட்டுமன்றி, மன்னார் மாவட்டத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் ஆழ்துளை கிணறுகள் மூலமே குடி தண்ணீர் பெறப்படுகிறது. எதிர் வரும் காலங்களில் ஆழ்துளைக் கிணற்று தண்ணீர் உவர் நீராக மாற வாய்ப்புள்ளதாக நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் தெரிவித்துள்ளனர். எனவே அதற்கு மாற்றீடாக ஏற்கனவே முன்மொழியப்பட்டு செயற்படுத்தப்படுகின்ற மல்வத்து ஓயாத் திட்டம் மந்த கதியில் உள்ளது. அதை விரைவுபடுத்த நிதி ஒதுக்க வேண்டியுள்ளது. அந்த திட்டத்தை மேற்கொள்ளும் போது முழுமையாக மன்னார் மாவட்டத்திற்கும், செட்டிகுளத்திற்கும் குடி தண்ணீரை வழங்க முடியும் என்பதுடன் லிவசாயத்தையும் மேற்கொள்ள முடியும் எனத் தெரிவித்திருந்தேன்.

மன்னார் மாவட்டத்தில் தலைமன்னாருக்கும், இராமேஸ்வரத்திற்கும் இடையில் பாதைச் சேவை இடம்பெற வேண்டும் என்ற விடயத்தை வலியுறுத்தினேன். அதன் முக்கியத்தையும், அது தொடர்பாக இந்திய உயர் ஸ்தானிகர் கூறிய விடயத்தையும் கூறியிருந்தேன். இந்திய உயர் ஸ்தானிகர் இறங்குதுறை அமைக்குமாறு கோரினார். அதற்கான முன்மொழிவை சமர்ப்பித்தேன்.

மன்னார் தீவுப் பகுதி வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்படுகிறது. வடிகாலமைப்பு சீரில்லாது ரயில் பாதைகள், வீதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் மக்கள் பல மாதங்களாக பாதிக்கப்படுகிறார்கள். அதற்கு நிரந்த தீர்வை காண 198 மில்லியன் ரூபா தேவை என கூறியிருந்தேன். அது தொடர்பில் கவனம் செலுத்துவதாக ஜனாதிபதி கூறியிருந்தார்.

வவுனியா மாவட்டத்தில் சிறிய, பெரிய குளங்கள் பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாது உள்ளன. இதனால் நீரைத் தேக்கி வைக்க முடியாத நிலை உள்ளது. பல குளங்கள் முழுமையாக புனரமைக்கப்பட வேணடியுள்ளன்ச். அதறகான நிதி ஒதுக்கீடு தொடர்பிலும் கருத்துக்களை முன்வைத்திருந்தேன். வவுனியா மாவட்ட செயலக கட்டமானது 1938 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அதனை திருத்தி அமைக்க வேண்டிய தேவைகள், அதனை நவீன மயப்படுத்த வேண்டிய தேவைகள் உள்ளன. அது தொடர்பான முன்மொழிவுகளை அரசாங்க அதிபர் என்னிடம் வழங்கியிருந்தார். அதனை நான் ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்தேன்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் வட்டுவாகல் பாலத்திற்கு இந்த வருட வரவு – செலவுத் திட்டத்தில் 1000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. மீண்டும் அதனை முழுமைப்படுத்த இன்னும் 1000 மில்லியன் ரூபா தேவை எனவும் கூறியிருந்தேன் . பாண்டியன்குளம், குத்துபாலம சிதைவடைந்து போக்குவரத்துக்கு ஆபத்தான நிலையில் உள்ளது. அதை புனரமைக்க 500 மில்லியன் ரூபா தேவை என கூறியிருந்தேன். அதனை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டார்.

வங்கலை பிரதேசத்தில் விரைவான கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. அதை தடுக்க 23 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டம் ஆரம்பமாகவுள்ள நிலையில் அதனை முழுமைப்படுத்த மேலும் 23 மில்லியன் ரூபா உடனடியாக தேவை எனவும் கூறியிருந்தேன்.

வடக்கு மாகாணத்தில் பல வருடங்களாக இடமாற்றப் பிரச்சினை உள்ளது. குறிப்பாக வன்னி மாவட்டத்தின் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வலயங்களில் ஆசிரியர் பற்றாக்குறை உள்ளது. பல ஆசிரியர்கள் யாழில் இருந்து வந்துள்ளார்கள். அவர்கள் 7,8 வருடம் முழந்ததும் யாழ் செல்கிறார்கள். இதனால் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்படுகிறது. இனிவரும் காலங்களில் கோட்டா முறையில் அதனை மாவட்டங்களில் தெரிவு செய்ய வேண்டும் எனத் தெரிவித்தேன். பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த வேண்டும் எனவும் கூறியிருந்தேன். – எனத் தெரிவித்தார்.



# வவுனியாவின் பல பகுதிகளிலும் அடிக்கடி மின் விநியோகத் தடை

## மக்களுக்குப் பெரும் அசௌகரியம்



(கி.வசந்தன்)

வவுனியாவின் பல பகுதிகளிலும் அடிக்கடி இடம்பெறும் மின் தடையால் மக்கள் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

வவுனியாவில் நேற்றுப் பல பகுதிகளலும் அடிக்கடி மின் தடை ஏற்பட்டிருந்தது. இதனால் அரச அலுவலகங்கள், பாடசாலைகள், வங்கிகள், வர்த்தக நிலையங்கள் என்பன பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டன. பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்த னர்.

வவுனியாவில், வவுனியா நகரம், கடை வீதி, கற்குழி, வைரபு ளியங்குளம், பண்டாரிக்குளம், மன்னார் வீதி, ஊக்குளாங்குளம், சூடுவெந்தபுலவு, இராசேந்திரங்குளம் உள்ளிட்ட பல பகுதிகளில் மின் தடை ஏற்பட்டிருந்தது.

அதிலும், பல பகுதிகளில் எந்தவித முன்னறிவித்தலுமின்றி மின் தடை ஏற்பட்டதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.







# கற்பிட்டி உச்சமுனைக் காட்டில் கைவிடப்பட்ட கட்டுத் துப்பாக்கி இரு தோட்டாக்களுடன் மீட்பு

**(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

கற்பிட்டி உச்சமுனை காட்டில் கைவிடப்பட்ட நிலையில் கட்டுத் துப்பாக்கி ஒன்று இரு தோட்டாக்களுடன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கற்பிட்டி விஜய கடற்படையினரின் இரகசிய தகவலுக்கு அமைய கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஏ.ஆர் லக்ஸ்மன் றன்வல ஆராச்சி தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் கற்பிட்டி உச்சமுனை தேவாலயத்திற்கு பின்னால் உள்ள அடர்ந்த காட்டுப் பகுதியில் கட்டு துப்பாக்கி ஒன்றும் பாவிக்கப்படாத ஒரு தோட்டாவும் அத்தோடு வெற்று தோட்டா ஒன்றும் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இத் துப்பாக்கி எந்த தேவைக்காக பயன்படுத்தப்பட்டது, மனித கொலைக்காகவா அல்லது மிருக வேட்டைக்காகவா என்ற கோணங்களில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிம்றன எனக் கற்பிட்டி பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# குருந்தூர்மலை பகுதியில் கைது செய்யப்பட்ட இரு விவசாயிகளுக்கும் மீண்டும் விளக்கமறியல்









**(பா.சதீசன்)**

குருந்தூர் மலையில் கைது செய்யப்பட்ட இரு விவசாயிகளையும் ஜூன் 7 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதிவான் நேற்றைய தினம் உத்தரவிட்டுள்ளார்.

குமுழமுனை தண்ணிமுறிப்பு குளத்தின் கீழான நீர்ப்பாசனத்தின் ஊடாக விவசாயம் செய்யும் நோக்கில் அந்தக் காணியின் உரிமையாளர் சசிகுமார் என்பவர் தனது பணியாளர்கள் மூலம் காணியை டிரக்டரினால் மே மாதம் 10 திகதி உழவு செய்தார். குருந்தூர் மலைப் பகுதியில் இரு விவசாயிகளால் உழவு செய்து கொண்டிருந்தபோது தொல்பொருள் தளத்தை சேதப்படுத்தினர் எனக் கூறி, புத்த துறவி கல்கமுவ சாந்தபோதி தேரர் தொல்பொருள் திணைக்களத்துக்கு அளித்த புகாரைத் தொடர்ந்து அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணையின் பின்னர் மே மாதம் 15 வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். தொடர்ந்து மே 29 வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்ட நிலையில் மீண்டும் நேற்றையதினம் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டு மீண்டும் ஜூன் 5 ஆம் திகதி வரை அவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

# குறைபாடுகளுடன் உரிய பராமரிப்புமற்ற அரச பஸ்ஸை யாழ் - வவுனியா சேவையில் ஈடுபடுத்திய சாரதி சிக்கலில்

## சட்டநடவடிக்கை எடுத்து மோட்டர் போக்குவரத்துத் திணைக்களம் அதிரடி




(கி.வசந்தன்)

போக்குவரத்துக் குறைபாடுகளைக் கொண்ட அரச பஸ் ஒன்றின் சாரதியின் அனுமதிப் பத்திரம் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், பத்து நாள்களுக்குள் பஸ்ஸை சீரமைக்காவிடில் பஸ்ஸுக்கு நிரந்தரத் தடை உத்தரவு வழங்கப்படும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் யாழில் இருந்து வவுனியா நோக்கிப் பயணிகளை ஏற்றிச் சென்ற இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியாசாலைக்கு சொந்தமான பஸ்ஸின் சாரதிக்கே இவ்வாறு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுவரும் அரச மற்றும் தனியார் பஸ்கள் வவுனியா மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரிகளால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது யாழில் இருந்து வவுனியா வந்த பல பஸ்களில் பல்வேறு குறைபாடுகள் உள்ளமை அவதானிக்கப்பட்டது. இதனையடுத்து அந்த பஸ்களின் சாரதிகளுக்கு பல அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன.சில பஸ்களின் சாரதிகளுக்கு குற்றப் பத்திரங்களும் வழங்கபட்டன.

அத்துடன், வவுனியாசாலைக்கு சொந்தமான அரச பஸ் ஒன்றில் பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்ட நிலையில், அதன் சாரதியின் சாரதி அனுமதிப்பத்திரம் போக்குவரத்து பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், தற்காலிக பத்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்த பஸ்ஸில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் எதிர்வரும் 10 நாள்களுக்குள் சரி செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், சரி செய்யாத பட்சத்தில் பஸ்ஸின் சேவைக்கு நிரந்ந்த் தடைஉத்தரவு வழங்கப்படும் என மோட்டர் போக்குவரத்து திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறைபாடுகளை நிவர்த்தி செய்யாமல் சேவையில் ஈடுபடுவது குற்றமாக கருதப்படும் என மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவுறுத்தியுள்ள நிலையில் சம்பந்தப்பட்ட பஸ் நேற்றைய தினமும் சேவையில் ஈடுபட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# காற்று, கடல் கொந்தளிப்புக் குறித்து சிவப்பு எச்சரிக்கை வெளியிடப்பட்டது



(உடப்பு க.மகாதேவன்)

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த எச்சரிக்கையானது இன்று பிற்பகல் 12.30 வரை அமுலில் இருக்குமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, சிலாபம் முதல் புத்தளம் வரையிலும், மன்னார் முதல் காங்கேசன்துறை வரையிலும், காலி முதல் ஹம்பாந்தோட்டை வழியாக பொத்துவில் வரையிலும் உள்ள கரையோர கடற்பகுதிகளுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் உள்ள பொது மக்கள் இதுதொடர்பில் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அதன்படி, மறு அறிவிப்பு வரும் வரை கடற்பகுதிகளுக்கு பயணம் செய்ய வேண்டாம் என்று மீன்பிடி மற்றும் கடல் சார் சமூகத்தினருக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.









# ஆசிரியர் இடமாற்றத்தை ஆட்சேபித்து நேற்று திம்பிலி பாடசாலையில் எதிர்ப்பு போராட்டம்!

(பா.சதீசன்)

ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்பக் கோரியும், ஆசிரியர் இடமாற்றங்களை நிறுத்தகோரியும் எதிர்ப்பு போராட்டம் ஒன்று நேற்றையதினம் காலை திம்பிலி ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட திம்பிலி கிராமத்தில் அமைந்துள்ள திம்பிலி ஆரம்ப பாடசாலையில் இருக்கும் ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுமாறும், ஏற்கனவே அந்தப் பாடசாலையில் கற்பிக்கும் ஆங்கில பாட ஆசிரியரின் இடமாற்றத்தை நிறுத்த கோரியும் அப்பிரதேச மக்கள், கிராம மட்ட அமைப்பினர் இணைந்து பாடசாலைக்கு முன்பாக எதிர்ப்பு நடவடிக்கையில் நேற்றைய தினம் ஈடுபட்டனர்.

கடந்தவருடம்மேமாதம்ஆங்கிலஆசிரியர் ஒருவர் இப்பாடசாலைக்கு நியமிக்கப்பட்டு திடீரென அவ் ஆசிரியருக்கு இம்மாதம் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. இவ் ஆசிரியரின் இடமாற்றம் குறித்து கோட்டக்கல்வி பணிமனையிடம் கதைத்தபோது இதற்குரிய தீர்வை ஒரு மாதகாலத்திற்குள் வழங்குவதாக உரிய அதிகாரிகள் கூறியுள்ளனர் எனப் பெற்றோர்கள் கூறுகின்றனர். இருப்பினும் ஒரு மாத காலத்திற்குள் ஆசிரியர் இடமாற்றம் நிவர்த்தி செய்யப்படாதுவிடின் மீண்டும் எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளார்கள் எனவும் தெரிவித்தனர்.

நேற்றைய போராட்டத்தில் அந்தக் கிராம மக்கள், கிராம மட்ட அமைப்பினர், நலன்விரும்பிகள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தார்கள்.




















# ஸ்ரீமத் வாமதேவ சிவாக்கர தேசிக சுவாமிகளின் அருளுரை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் தமிழ் நாடு அருள்திரு ஸ்ரீமத்

வாமதேவ சிவாக்கர தேசிக சுவாமிகளின் திருமுறை அருளாசியுரை கடந்த செவ்வாய்க்கிழமை மாலை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்விற்கு வருகைதந்த சுவாமிகளை பூரண கும்பமரியாதையுடன் தலைவர் அபிராமி கைலாசபிள்ளை தலைமையில், பொதுச்செயலாளர் வி.கந்தசாமி, நிதிச்செயலாளர் கே.குமார் மற்றும் சிரேஷ்ட நிர்வாக உறுப்பினர்கள் வரவேற்றனர். கலந்து கொண்ட பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் அவர்களுக்கு கௌரவம் வழங்கப்பட்டது. தலைவர், பொதுச்செயலாளர் இணைந்து சுவாமிகளுக்கு சமய நூல்களை வழங்கினர்.









# தனித் தமிழர்களே வாழும் கல்லாற்றில் புத்தர் சிலையா? முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நடராஜா சீற்றம்!

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தனித் தமிழ் மக்கள் முழுமையாக வாழ்கின்ற கல்லாற்றில் புத்தர் சிலை தொடர்ந்து நிலைகொண்டிருப்பது முறையாகுமா? தேவையா? அது இனசௌயன்யத்தை – நல்லிணக்கத்தை – பாதிக்கலாம். எனவே அச்சிலை அகற்றப்பட வேண்டும்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மா.நடராஜா தெரிவித்தார்.

அப்புத்தர் சிலை விவகாரம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் –

பெரிய கல்லாற்று பாலத்தின் அருகே பிரதான வீதியில் இராணுவச் சூழல் இருந்த காலகட்டத்திலே இந்த புத்தர் சிலை ஒரு தனியார் காணியில் வைக்கப்பட்டிருக்கின்றது.

சின்னவத்தை பிரதேச பிக்கு ஒருவரினால் இந்த சிலை அடாத்தாக அந்த காணியிலேயே வைக்கப்பட்டதாக அறிகிறேன்.

அந்த காலகட்டத்திலே இராணுவம் – பொலிஸார் ஆட்சி நிலவிய காலம் என்ற காரணத்தினால் பொதுமக்களாலோ ஏனைய அரசியல்வாதிகளாலோ எதுவும் செய்ய முடியாத ஒருசூழ்நிலை இருந்தது.

ஆனால், இன்று சகல இன மக்களையும் அனுசரித்து சாதி, இன,மத பேதம் இல்லாமல் ஊழல் ஒழிப்போம் என்று வந்த அரசாங்கம் ஆட்சியில் உள்ளது. எனவே முழுத் தமிழ் மக்கள், இந்துக்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் வாழ்கின்ற இந்த கல்லாற்றிலே, அதுவும் கிறிஸ்தவ தேவாலயத்திற்கு முன்பாக தனியார் காணியில் இது அடாத்தாக வைக்கப்பட்டது.

இன்று அங்கு எந்த பௌத்தரும் இல்லை. வணங்குவதற்குக்கூட யாருமில்லை.

இன்று அது அங்கு அவசியமா என்ற கேள்வி எழுகின்றது. இது தொடர்பாக இந்த மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் யாரும் வாய்திறப்பதாகவும் இல்லை . எதற்கெல்லாமோ குரல் எழுப்புகிறார்கள். ஆனால் எமது உரிமையோடு, இருப்போடு, மண்ணோடு கூடிய இந்த விடயத்தை கண்டும் காணாமல் இருக்கிறார்கள்.



இதேபோல் உகந்தமலையிலும் புத்தர் சிலை முளைத்துள்ளது.

இந்துவாகப் பிறந்த புத்தபகவான் எந்த இடத்திலும் தன்னைக் கொண்டு இப்படி ஏனைய இன வேறிடத்தில் நிறுத்தி இன உறவை சீரழிக்குமாறு கூறவில்லை. உகந்த மலையில் இதே செயல்பாடுதான் தொடர்ந்திருக்கின்றது.

எனவே நல்லிணக்க அரசாங்கம் இதைக் கவனத்தில் கொண்டு இவ்வாறு தனித் தமிழர்கள் வாழ்கின்ற இடங்களில் இருக்கின்ற இந்த புத்தர் சிலைகளை அகற்ற வேண்டும் என்று அன்பாக வேண்டிக் கொள்கின்றோம். – என்றார்.









# ஜனாதிபதி தலைமையில் 2026 ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல்



2026 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திற்கான பரிந்துரைகள் மற்றும் முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள் மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தை தயாரிக்கும் போது மாவட்ட மட்டத்தில் மக்களின் அடிப்படை மற்றும் அவசரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டியதன் அவசியத்தை இதன்போது ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மாவட்ட அளவில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் மக்களின் ஏனைய அவசர அபிவிருத்தித் தேவைகள் தொடர்பில் இனங்கண்டு, அத்திட்டங்களை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்கள், ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமநாயக்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபொன்சு, அரச நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஈ. ஏ. ரத்னசீல, தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் நாயகம் எம். அனோமா நந்தனி மற்றும் நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# வெலிக்கடைச் சிறைச்சாலை கட்டுப்பாட்டாளர் கைது

வெலிக்கடை சிறைச்சாலையின் கட்டுப்பாட்டாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

போதைப்பொருளை சிறைச்சாலைக்குள் கொண்டுவருவதற்கு முற்பட்ட குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி போதைப்பொருளை உறுதியாக அடையாளம் காண்பதற்கும் அதன் எடையை மதிப்பிடுவதற்குமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.





# கொத்மலை விபத்துக் குறித்த ஆய்வறிக்கை வெளியானது

கொத்மலை – கெரண்டிஎல்ல பகுதியில் 23 பேர் உயிரிழந்த விபத்து தொடர்பில் ஆராய்ந்த குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

கதிர்காமம் முதல் கண்டி ஊடாக குருநாகல் நோக்கி சென்ற இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ் குறித்த பிரதேசத்தில் கடந்த 11 ஆம் திகதி 100 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

அந்த விபத்தில் 23 பேர் உயிரிழந்ததுடன், 60 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

விபத்திற்கான காரணம் தொடர்பில் ஆராய்ந்த குழு தயாரித்த அறிக்கையில் 24, 25 ஆம் பக்கங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

"மோட்டார் வாகன சட்டத்தில் நான்கரை மணித்தியாலத்திற்குள் அரை மணித்தியாலத்திற்கும் குறைந்த நேரத்திற்குள் சாரதிகள் ஓய்வு எடுக்க வேண்டும்.

ஓய்வு நேரம் அரை மணித்தியாலத்திற்குக் குறையுமாயின் முழு நேரத்தையும் தொடர்ச்சியான நேரமாகக் கருத வேண்டும்.

கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பஸ் சாரதி வெலிமடையில் 15 நிமிடங்கள் மாத்திரமே ஓய்வு எடுத்துள்ளார்.

அதன்படி, விபத்து இடம்பெற்ற போது சாரதி ஆறரை மணித்தியாலத்திற்கும் அதிகமான நேரம் தொடர்ச்சியாக பஸ்ஸை செலுத்தியுள்ளார்.

எனவே மோட்டார் வாகன சட்டத்தின் மேற்குறிப்பிட்ட உறுப்புரையை சாரதி மீறியுள்ளார் என அந்தக் குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விபத்துக்குக் காரணமாக அமைந்த வேறு விடயங்கள், இந்த விபத்துக்குக் காரணமான அனைத்திற்கும் சாரதி தனிப்பட்ட முறையில் பொறுப்புக்கூற முடியாது.

வீதியின் இருமருங்கிலும் வீதி அதிகார சபைக்கு ஒதுக்கப்பட்ட காணியில் கடைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளமையும் இந்த விபத்துக்குக் காரணம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விபத்து இடம்பெற்ற பகுதியிலுள்ள வீதியின் இரு மருங்கிலும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பலகைகளிலான இரு கடைகள் காணப்படுகின்றன.

இந்த இரு கடைகளுக்கும் இடையில் 50 அடி தூரம் காணப்படுகின்றது. இந்த இரு கடைகளுக்கிடையிலேயே விபத்து நேர்ந்துள்ளது.

வீதியின் இடது புறம் துப்பரவு செய்யப்பட்டு, வீதியின் ஓரத்திலிருந்த மண் மேடுகளை சீர்திருத்தி இந்தக் கடை நிர்மாணிக்கப்பட்டு, வாடிக்கையாளர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறித்த கடைகள் நிர்மாணிக்கப்படுவதற்கு முன்னர் அந்த இடத்தில் மண் மேடுகளும் சிறிய மரங்களும் இருந்ததைப் பழைய புகைப்படங்கள் உறுதிப்படுத்துகின்றன.

அந்த மண் மேடுகள் அங்கே இருந்திருந்தால், சிறிய மரங்கள் வளர்ந்திருந்தால், இந்த விபத்து இடம்பெற்றிருக்காது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் முறையான கள ஆய்வு மற்றும் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டுள்ள இதுபோன்ற அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும்" என விபத்து தொடர்பில் ஆய்வு மேற்கொண்ட குழு தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

# உள ரீதியாக பாதிப்பிற்குள்ளாகும் மாணவர்களுக்கான வேலைத்திட்டம்

பல்கலைக்கழகங்களில் உள ரீதியாக பாதிப்பிற்குள்ளாகும் மாணவர்களை அதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

உளவியல் துறையில் நிபுணத்துவம்பெற்றவைத்தியர்களைஇணைத்து இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும் என கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த சில மாதங்களில் பதிவான பல்கலைக்கழக மாணவர்களின் தற்கொலை சம்பவங்கள் மற்றும் ஏனைய மோதல் சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு கல்வி அமைச்சு இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

இது குறித்து பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என கல்வி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.



# எறிகணைத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பிரதமருக்கு ராகுல் கடிதம்

பாகிஸ்தானின் எறிகணை தாக்குதலால் பாதிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீரின் பூஞ்ச் மற்றும் பிற பகுதிகளுக்கு நிவாரண நிதி உதவி வழங்குமாறு கோரி பிரதமர் நரேந்திர மோடிக்கு காங்கிரஸ் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க் கட்சித் தலைவருமான ராகுல் காந்தி கடிதம் எழுதியுள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் குறிப்பிடுகையில்,

"நான் சமீபத்தில் பூஞ்ச் பகுதிக்குச் சென்று பார்வையிட்டேன். அங்கு பாகிஸ்தானின் எறிகணை தாக்குதலில் 4 குழந்தைகள் உட்பட 14 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். இந்த திடீர் மற்றும் கண்மூடித்தனமான தாக்குதல் பொது இடங்களில் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளது. நூற்றுக்கணக்கான வீடுகள், கடைகள், பள்ளிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் மோசமாக சேதமடைந்துள்ளன.

பல வருட கடின உழைப்பு ஒரே அடியில் பாழாகிவிட்டதாக பாதிக்கப்பட்ட பலர் கூறினர். பூஞ்ச் மற்றும் பிற எல்லைப் பகுதி மக்கள் பல தசாப்தங்களாக அமைதியுடனும் சகோதரத்துவத்துடனும் வாழ்ந்து வருகின்றனர். இன்று அவர்கள் இந்த ஆழமான நெருக்கடியைக் கடந்து செல்ல, அவர்களின் வலியைப் புரிந்துகொண்டு, அவர்களின் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப அனைத்து உதவிகளையும் வழங்குவது நமது கடமையாகும்.

பாகிஸ்தானின் எறிகணை தாக்குதலால் பாதிக்கப்பட்ட பூஞ்ச் மற்றும் பிற பகுதிகளுக்கு இந்திய அரசு ஓர் உறுதியான மற்றும் தாராளமான நிவாரணம் மற்றும் மறுவாழ்வுக்கான நிதி உதவியை வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# சாதிவாரி கணக்கெடுப்பு சமூக நீதிக்கு வழிவகுக்கும்

## குடியரசுத் துணைத் தலைவர் தெரிவிப்பு

மக்கள் தொகை கணக்கெடுப்புடன் மேற்கொள்ளப்படவுள்ள சாதிவாரி கணக்கெடுப்பு மாற்றம் ஏற்படுத்தும் நடவடிக்கையாக இருக்கும் என்றும், சமூக நீதிக்கு வழிவகுக்கும் எனவும் குடியரசுத் துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நேற்று நடைபெற்ற இந்திய புள்ளியியல் பணி பயிற்சி முடித்த 2024 மற்றும் 2025 ஆம் ஆண்டுகளுக்கான தொகுப்புகளை சேர்ந்த அதிகாரிகளிடையே உரையாற்றியபோதே ஜக்தீப் தன்கர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தொடக்க காலத்தில், சாதி அடிப்படையிலான மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைமுறையில் இருந்தது. இறுதியாக, சாதிவாரி கணக்கெடுப்பு 1931 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. அவ்வாறு பல முறை நடத்தப்பட்ட சாதிவாரிக் கணக்கெடுப்பின் மூலம் எனது சாதி குறித்து அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. எனவே சாதி அடிப்படையிலான கணக்கெடுப்பின் முக்கியத்துவத்தை நான் உணர்ந்துள்ளேன்.

மக்கள் தொகை கணக்கெடுப்புடன்



சாதிவாரி கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படும் என்ற மத்திய அரசின் முடிவு சிறப்பானது. இந்த முடிவு ஒரு நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் படிநிலையாக இருப்பதுடன், சமூக நீதிக்கும் வழி வகுக்கும். இது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், அவர்களது விருப்பங்களையும் பூர்த்தி செய்வதாக அமையும். பிரிவினையை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, சிந்தனையுடன் சேகரிக்கப்பட்ட சாதி குறித்த தரவுகள் ஒருங்கிணைப்புக்கான கருவியாக இருக்கும். இந்த வழிமுறை சமத்துவத்திற்கான சுருக்கமான அரசியலமைப்பு உறுதிமொழிகளை அளவிடக்கூடிய, பொறுப்புணர்வுள்ள கொள்கை விளைவுகளாக மாற்றும்.

வலுவான புள்ளிவிவரங்கள் எதுவுமின்றி பயனுள்ள கொள்கைக்கான திட்டமிடல் செயலானது இருளில் அறுவை சிகிச்சை மேற்கொள்வது போன்றது. நாட்டின் தேசிய தரவுத்தளத்தில் உள்ள ஒவ்வொரு தரவும் ஒவ்வொரு குடிமகன் தொடர்பான தகவல்களைப் பிரதிபலிக்கிறது. நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்கானத் திட்டங்களை வகுக்கும் பொது தரவுகளின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடியும். சேவை செய்வது வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்திலும் வளமான அனுபவங்களை அளித்திடும். புள்ளிவிபரங்கள் உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்காது.

வளர்ச்சியடைந்த நாடாக உருவெடுப்பதற்கான இந்தியாவின் விருப்பங்கள் ஆதார அடிப்படையிலான திட்டமிடலில் உறுதியாக வேரூன்றியுள்ளன. ஒரு தேசமாக, நம் அனைவருக்கும் "வளர்ச்சியடைந்த இந்தியா" என்பது வெறும் கனவு அல்ல, அது நம் அனைவரின் குறிக்கோள்." என்றார்.





# அமெரிக்காவில் கல்வி கற்கும் சீன மாணவர்களின் விசாக்கள் உடனடி ரத்து; ட்ரம்ப் நிர்வாகம் அறிவிப்பு

அமெரிக்காவில் கல்வி கற்றுவரும் சீன மாணவர்களின் விசாக்களை உடனடியாக ரத்து செய்வதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

சீன கொம்யூனிஸ்ட் கட்சியுடன் தொடர்புடையவர்களும், முக்கியமான துறைகளில் கல்வி கற்பவர்களும் இதில் அடங்குவதாக, அமெரிக்காவின் வெளிவிவகார செயலாளர் மார்கோ ரூபியோ குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் சீனா மற்றும் ஹொங்கொங்கிலிருந்து விசாவுக்காக விண்ணப்பிப்பவர்களின் விண்ணப்பங்கள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் 280,000 சீன மாணவர்கள் அமெரிக்காவில் கல்வி கற்றுள்ளனர் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் பயிலும் வெளிநாட்டவர்களில் அதிகமானோர், சீனாவைச் சேர்ந்தவர்கள் எனக் குறிப்பிடப்படுகிறது.

இந்தநிலையில், கொரோனா தொற்று பரவல் உள்ளிட்ட சில காரணங்களால் 2 நாடுகளுக்கும் இடையிலான உறவு தற்போது மோசமடைந்து வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.



# மகளை விற்பனை செய்த தாய்க்கு ஆயுள் தண்டனை

தென்னாபிரிக்காவில் ஆறு வயது மகளைக் கடத்தி விற்பனை செய்த தாய் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதித்து அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தனது ஆறு வயது மகளைக் கடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட தென்னாபிரிக்கப் பெண்ணுக்கும் அவருக்கு உதவிய குற்றச்சாட்டில் மேலும் இருவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மனித கடத்தல் குற்றச்சாட்டில், இந்த தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட சிறுமி இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சிறுமியைத் தேடும் பணிகளும் தற்போது இடம்பெற்று வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# காசா போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டது இஸ்ரேல்

காசா போர் நிறுத்தத்திற்கான அமெரிக்காவின் திட்டத்தை இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஒப்புக்கொண்டுள்ளார் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்கத் தூதர் ஸ்டீவ் விட்காஃப் இந்த திட்டத்தை முன்மொழிந்தார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில், காசா பகுதியில் பணயக்கைதிகளாக உள்ளவர்களின் குடும்பத்தினரிடம் நெதன்யாகு தனது ஒப்புதலை தெரிவித்துள்ளார் என குறிப்பிடப்படுகின்றது.

பலஸ்தீனிய போராளிக் குழுவான ஹமாஸ், முன்னதாக இந்த திட்டத்தைப் பெற்றுள்ளதாகவும் அதை ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவித்திருந்த நிலையில் இந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலால் ஆதரிக்கப்படும் இந்த அமெரிக்கத் திட்டத்தின் சாத்தியமான ஏற்றுக்கொள்ளல், அப்பகுதியில் விரோதப் போக்கை நிறுத்துவதற்கும், பணயக் கைதிகளை விடுவிப்பதற்கும் நடந்து வரும் முயற்சிகளில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



# இன்றைய ராசி பலன்கள் - 30.05.2025




இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு சாதகமான நாள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் உங்களுக்கு சாதகமான பலன்களை அளிக்கும்.

நீங்கள் பணிகளை எளிதாக மேற்கொள்வீர்கள். பணியிடத்தில் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.

இன்று குடும்பத்தில் மகிழ்ச்சியும் நல்ல புரிந்துணர்வும் காணப்படும். அனுசரணையான மன நிலை மூலம் குடும்பத்தில் நல்லிணக்கம் பராமரிக்கலாம்.

இன்று நிதிநிலையில் சில கட்டுப்பாடுகள் காணப்படும். இதனால் வரவு செலவு இரண்டும் காணப்படும்.

இன்று அஜீரணக் கோளாறு பிரச்சினை காணப்படும். உணவில் கவனம் தேவை.




அனுசரணையான அணுகுமுறை மூலம் நீங்கள் இன்றைய நாளை மகிழ்ச்சிகரமாக ஆக்கலாம். இன்று அமைதியாகவும் பொறுமையாகவும் இருக்க வேண்டும்.

உங்கள் மேலதிகாரியுடன் தகவல் தொடர்பில் இருக்கும் பிரச்சினை காரணமாக பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சிறிது அனுசரித்து செல்வதன் மூலம் இந்தச் சூழ்நிலையை நீங்கள் சமாளிக்கலாம்.

குடும்பத்தில் அகந்தைப் போக்கை தவிர்க்க வேண்டும். நெருங்கிய உறவுகளிடம் சண்டை ஏற்படலாம். உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி குறித்த கவலை காணப்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படாது. பண இழப்புக்கான வாய்ப்பு உள்ளதால் பணத்தை கவனமாகக் கையாளவும்.




உங்களையும் பிறரையும் மகிழ்விக்க சரியான அணுகுமுறையை நீங்கள் மேற்கொள்ள வேண்டும். எது நடக்கிறதோ அதை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். பிரார்த்தனை மற்றும் வழிபாடு மூலம் அனைத்தும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று பணிகள் அதிகம் இருக்கும் காரணத்தினால் அதிருப்தி நிலவும். உங்கள் மேலதிகாரிகளுடன் அனுசரிக்கும் போக்கில் பிரச்சினை காணப்படும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. நெருங்கிய உறவுகளிடம் நல்லிணக்கம் குறைந்து காணப்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. பணத்தை பொறுத்தவரை இன்று முக்கிய முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.




உங்கள் முயற்சிகளில் வெற்றி காண தைரியமாகவும் உறுதியுடனும் செயல்பட வேண்டும்.

கவனமாகப் பணியாற்றுவதன் மூலம் நன்மை பெறலாம். என்றாலும் தவறுகள் ஏற்படாமல் இருக்க எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

உறவு முறை மகிழ்ச்சிகரமாக இருக்காது. உங்கள் உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளிடம் சில பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. இன்று எச்சரிக்கையாகவும் விழிப்புணர்வுடனும் இருக்க வேண்டும்.

கால் மற்றும் தொடைகளில் வலி காணப்படும். வயிற்று உப்பசம் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.




இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். முயற்சிகள் எடுத்தாலும் அதிருப்தி காணப்படும். முக்கிய முடிவுகள் எடுப்பது வரவேற்கத்தக்கதல்ல. அதனை தவிர்ப்பது நல்லது.

நீங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும். பொறுமையை பராமரிக்க வேண்டும். இதனால் வெற்றி அடையலாம். உங்கள் சக பணியாளர்களுடன் மோதல் ஏற்பட வாய்ப்புள்ளது.

குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் குறைந்து காணப்படும். அகந்தைப் போக்கை தவிர்க்கவும்.

நிதிநிலைமை மகிழ்ச்சி கரமாக இருக்காது. குடும்பத்திற்காக பணம் செலவு செய்ய நேரும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அதற்காக இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.




உங்கள் விருப்பங்களை நிறைவேற்ற நீங்கள் நேர்மையான முயற்சி எடுப்பீர்கள். இது உங்களுக்கு நன்மை பெற்றுத் தரும். என்றாலும் தேவையற்ற கவலைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பணிகள் இறுக்கமாக காணப்படும். இன்று பணிகள் அதிகமாக இருப்பதால் நேரத்தோடு பணியை முடிக்க வேண்டும்.

இன்று விரும்பத்தகாத தருணங்கள் ஏற்படலாம். இன்று உறவுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் அணுகுமுறையில் பொறுமை தேவை.

இன்று மிதமான நிதி வளர்ச்சி காணப்படும். நிதிநிலைமையில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

பதற்றம் காரணமாக தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது. அனுசரணையான அணுகுமுறை நல்லது.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. விரைந்து முடிவெடுப்பதை தவிர்க்கவும். இன்று சாதுர்யமாக செயல்பட வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும்.

இன்று அதிக பணிகள் காணப்படும். பணி நிமித்தமான பயணம் காணப்படுகின்றது.

உங்கள் உறவில் சூடான விவாதங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. உங்கள் துணையுடன் தொடர்பு கொள்ளும் போது அமைதியாக இருத்தல் நல்லது.

இன்று நிதி வளர்ச்சி எதிர்பார்க்கும் வகையில் இருக்காது. செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் மற்றும் அதிக உழைப்பு காரணமாக உடல் வலி காணப்படும். ஓய்வெடுக்கவும் ஆன்மீக ஈடுபாட்டிற்கும் நேரம் ஒதுக்குங்கள்.




இன்று பல சௌகரியங்கள் காணப்படும். இன்று பயனுள்ள முடிவுகளை எடுக்கலாம்.

இன்று நீங்கள் மகிழ்ச்சியோடு பணியாற்றுவீர்கள். உங்கள் முயற்சிக்கு தகுந்த அங்கீகாரம் கிடைக்கும்.

இன்று உங்களின் உறவுமுறை சிறப்பாக இருக்கும். உங்கள் துணையுடன் இன்றைய நாளை கொண்டாடி மகிழ்வீர்கள்.

இன்று நிதி வளர்ச்சிக்கான சாத்தியம் உள்ளது. என்றாலும் உங்கள் செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உணவு முறையில் கவனம் செலுத்த வேண்டும்.

# இன்றைய ராசி பலன்கள் - 30.05.2025




இன்று நீங்கள் வெற்றி காணலாம். ஆனால் இன்று நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் உணர்ச்சி களை கட்டுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

பணி நிமித்தமான பயணம் காணப் படுகின்றது. உங்களின் நேர்மையான முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

உங்கள உடன் பிறந்தோர் மற்றும் நெருங்கிய உறவுகளுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் உறவில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று நீங்கள் உங்களை பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுத்திக் கொள்வது நல்லது.

பணியில் இன்று வளர்ச்சி காணப் படாது. பணியில் கவனம் குறைவாக இருக்கும். பொறுமையுடனும் எச்ச ரிக்கையுடனும் பணியாற்ற வேண்டும்.

குடும்பத்தில் நல்ல புரிந்துணர்வு காணப்படாது. நெருங்கிய உறவுகளுடன் விவாதம் அல்லது கருத்து வேறுபாடு காணப்படும்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். அது தேவை யற்ற செலவுகளாக இருக்கும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும். அமைதியாக இருப்பது சிறந்தது.




இன்று ஏற்ற இறக்கங்கள் காணப் படும்.ஆன்மீக ஈடுபாடு ஆறுதல் மற்றும் வெற்றியைப் பெற்றுத் தரும்.

இன்று உங்கள் பணியில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். பணி யில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது.

இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். அன்பு குறைந்து காணப்படும். இன்று நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று அதிக செலவுகள் காணப்படும். பணத்தை சிறந்த வகையில் செலவு செய்ய வேண்டும்.

உங்கள் பெற்றோரின் உடல் நலனில் கவனம் தேவை. அதற்காக நீங்கள் பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று திருப்தியும் முன்னேற்றமும் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும் நம்பிக்கையோடு அணுகுவது உங்க ளுக்கு நன்மை அளிக்கும்.

இன்று பணிகள் இறுக்கமாக காணப் படும். இது உங்களுக்கு வருத்தம் அளிக் கும். வெற்றி கிடைப்பதற்கான வாய்ப்பு அவ்வளவு சிறப் பாக இல்லை.

குழந்தைகளின் வளர்ச்சி கவலை அளிக்கும். உறவில் அகந்தைப் போக்கை கைவிட வேண்டும்.

இன்று பண வரவுக்கு உகந்த நாள் அல்ல. பணத்தை இழக்க வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும். கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே கவனமாக இருக்கவும்.

# ஞானச்சுடர் 329ஆவது மலர் வெளியீடு சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில்

(வடமராட்சி நிருபர்)

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், இன்று (30) வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஞானச்சுடர் 329 ஆவது மலர் வெளி யீடு இடம்பெறும்.

இன்று இடம்பெறும் வாராந்த நிகழ்வில் வைத்து ஞானச்சுடர் வைகாசி மாத 329 ஆவது மலர் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

ஆச்சிரம முதல்வர், சாதனைத் தமிழன் அமுதகலாசுரபி கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமை யில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை ஓய்வுநிலை கிராம சேவையாளர் செ ஞானசபேசனும் மதிப்பீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும் நிகழ்த்துவர்.

அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகளும், ஆச்சிரமத்தால் உத வித் திட்டங்களும் வழங்கப்படவுள் ளன.

# 6ஆம் தரத்தில் மாணவர்களை உள்வாங்குவதற்கான முதல் சுற்று மேன்முறையீட்டு பெறுபேறுகள் வெளியீடு

2024 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகளின் அடிப் படையில், 2025 ஆம் ஆண்டு 6 ஆம் தரத்திற்கு மாணவர்களை உள்வாங்கு வதற்கான முதல் சுற்று மேன்முறை யீட்டு பெறுபேறுகள் வெளியிடப்பட் டுள்ளன என கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.

மேற்படி பெறுபேறுகளை http://g6application.moe.gov.lk என்ற இணையத்தளத்திற்கு சென்று



பார்வையிட முடியும்.

மேன்முறையீடு மூலம் பாட சாலைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களை உள்வாங்குவது தொடர் பான விடயங்கள், சம்பந்தப்பட்ட பாட சாலை அதிபரால் மேற்கொள்ளப் படும் எனக் கல்வி அமைச்சு தெரிவித் துள்ளது.